# செயலட்டை

**பாடம்: பரதநாட்டியம்** **தரம்: 11**

## பஞ்ச ஜாதித் ததிங்கிணதொம்

1) ; ; ; ; ; ; ; ததிங் / ,கிணதொம் ததிங் , கி / ணதொம் ததிங், கிணதொம் // இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ததிங்கிணதொம் என்ன ஜாதியில் அமைந்துள்ளது?
✍திஸ்ரம்

2) ; ; ; ; தகிட ததிங்கிணதொம் / தகிட ததிங்கிணதொம் / தகிட ததிங் கிணதொம் // இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ததிங்கிணதொம் என்ன ஜாதியில் அமைந்துள்ளது?
✍சதுஸ்ரம்

3) ; ; ; ; ததிங், கி, ண, தொம் / ததிங் கி, ண, தொம் / ததிங் கி,ணதொம் // இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ததிங்கிணதொம் என்ன ஜாதியில் அமைந்துள்ளது?
✍சதுஸ்ரம்

4) ; ; ; ; ; ; ; ; / ,ததிங்கிண தொம் ததிங் / கிண தொம் ததிங்கிணதொம் // இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ததிங்கிணதொம் என்ன ஜாதியில் அமைந்துள்ளது?
✍கண்டம்

5) ; ; ; ; ; , தகததிங்கி / ணதொம் தகததிங்கிண / தொம் தக ததிங்கிணதொம் // இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ததிங்கிணதொம் என்ன ஜாதியில் அமைந்துள்ளது?
✍மிஸ்ரம்

6) ; ; ; ; ; , த, திங், கி / ண தொம் த த, திங், கிண / தொம் த, திங், கிணதொம் // இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ததிங்கிணதொம் என்ன ஜாதியில் அமைந்துள்ளது?
✍மிஸ்ரம்

7) ; ; ,தகதிகு ததிங்கிண தொம் தக / திகு ததிங் கிண தொம்த / கதிகு ததிங்கிணதொம் // இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ததிங்கிணதொம் என்ன ஜாதியில் அமைந்துள்ளது?
✍சங்கீர்ணம்

8) ; ; , த, திங், கி, ண, தொம் த, / திங், கி, ண, தொம் த / ,திங் கி, ண, தொம் // இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ததிங்கிணதொம் என்ன ஜாதியில் அமைந்துள்ளது?
✍சங்கீர்ணம்

## அபிநயம்

1) அபிநயம் என்பது யாது?
✍பார்ப்பவர்களை முன் கொண்டு வருதல்
✍எண்ணக்கருவை அங்க அசைவுகளாலும், முக பாவங்களாலும் வெளிப்படுத்தல்
2) அபிநயங்கள் பற்றி கூறும் நாட்டிய நூல்கள் எவை?
✍நாட்டிய சாஸ்திரம், அபிநய தர்ப்பணம்
3) நால்வகை அபிநயங்கள் எவை?
✍ஆங்சிகம் ,வாச்சிகம், ஆஹார்யம், சாத்விகம்
4) அபிநயதர்ப்பணத்தினைத் தமிழில் எழுதியவர்?
✍வீர ராகவன்
5) நான்கு வித அபிநயத்தின் வேறு பெயர்?
✍ஆங்சிகம் - சாயி ✍வாச்சிகம் - சஞ்சாயி
✍ஆஹார்யம் - அனுசாயி ✍சாத்விகம் - விபசாயி
6) நான்கு வித அபிநயம் பற்றி அபிநயதர்ப்பணம் கூறுவது யாது?
✍ஆங்சிகம் -அங்கங்களை வெளியிடுவது ✍வாச்சிகம் - வார்த்தைகளை வெளியிடுவது
✍ஆஹார்யம் -ஆடை ஆபரணங்களால் வெளியிடுவது ✍சாத்விகம் - உணர்ச்சிகளால் வெளியிடுவது
7) ஆங்கிக அபிநயத்தின் பிரிவுகள் எவை?
✍அங்கம், உபாங்கம், பிரதியாங்கம்
8) அங்கத்தில் இடம்பெறும் ஏழு அங்கங்கள் எவை?
✍தலை, கை, மார்பு, விரல்கள், பக்கம், இடை, பாதம்
9) பிரதியாங்கங்களில் இடம்பெறும் ஆறு உறுப்புக்கள் எவை?
✍புயங்கள், முன்கைகள், முதுகு, வயிறு, தொடைகள், முழங்கால்கள்
10) ஆங்கிக அபிநயத்தின் 4 வகைகள் வவை?
✍சூசிகா அபிநயம் - தாவர ஜென்மங்களில் எவற்றையேனும் கை கால்களால் அபிநயித்தல்
✍பாவ அபிநயம் - தலை கண்களால் பாவம் காட்டுவது
✍தொந்தா அபிநயம் - தலை, கண், பாதம், கை என்பவற்றால் யாவருக்கும் தெரியக்காட்டுவது
✍இலட்சணிகாபிநயம் - உலகத்திலுள்ள எல்லாப் பொருட்களையும் யாவரும் அறிந்து கொண்டு உள்ளது போல் ஆடுதல்

11) ஆங்கிக அபிநயத்தின் மேலும் இரண்டு வகை?

✍ **வெகுவான அபிநயம்** - இரண்டு கைகளையும் விடாமல் காட்டும் போது பாணாசுரன் ஆயிரம் கை உள்ளது போல் காட்டுதல்

✍ **அற்பமான அபிநயம்** - இறந்த, நிகழ், எதிர் காலம் ஆகிய முக்காலங்களில் பொருட்கள் நிற்கும் நிலையினை வெளிக்காட்டுவது

12) உபாங்கத்தில் அடம்பெறும் உறுப்புக்கள் எவை?

✍ கண், விழி, புருவம், கன்னம், மூக்கு, தாடை, பல்

13) வாச்சிக அபிநயத்தில் வார்த்தைகளின் கோர்வையாக விளங்குவது?

✍ பேச்சு, உரைநடை, கவிதை, நாடகம், இலக்கியம், இதிகாசம் போன்றவற்றில் இருந்து எடுத்த பகுதி

14) வாச்சிக அபிநயத்தின் 4 வகை யாது?

✍ சுகீத வாச்சிகம் - பாத்திரம் பாடலைத் தானே பாடி அபிநயித்தல்

✍ உபகீத வாச்சிகம் - பாடகர் சபையோர் மெச்சும் படி பாடும் போது பெண்கள் அபிநயித்தல்

✍ சுசப்த வாச்சிகம் - நடனமாது கணிப்பித்துக் கொண்டே நடனம் செய்வது

✍ உபசப்த வாச்சிகம் - நட்டுவனார் திறமையாகக் கணிக்க நடன பாத்திரம் ஆடுதல்

15) நாடகத்தில் பயன்படுத்தப்படும் 4 மொழிகள்?

✍ அதிபாஷை - விண்ணகத்தோர் மொழி

✍ ஆர்ய பாஷை - உயர்குடியினர் மொழி

✍ ஜாதி பாஷை - பாமரனின் மொழி

✍ யூன்யந்திரி பாஷை - விலங்கு மற்றும் பறவை மொழி

16) ஆஹார்ய அபிநயத்தின் 3 வகை?

✍ **நிஜ கார்ய அபிநயம்** - அங்கதம், முடி, மார்புப்படாகை, தட்டிச்சல்லடம், முலைக்கச்சு, அரைஞாண் அணிந்து ஆடுவது

✍ **அபிசாயி ஆஹார்யம்** - புராண இதிகாச நாடகத்திற்கு ஏற்ற வேஷம் பூணுவது

✍ **விபசாயி ஆஹார்யம்** - அந்த நாட்டுச் சபையோர் ஏற்றுக் கொள்ளும் படி உடை ஆபரணங்கள் அணிந்து நடிப்பது

17) ஆஹார்ய அபிநயத்தின் வேறு 4 வகைகள்?

✍ **புஷ்டம்** - பெரிய அரண்மனை, மரங்களின் சிறியமாதிரி உருவை அரங்கிற்குக் கொண்டுவருதல்

✍ **அலங்காரம்** - ஆடை அணிகலன்கள், மலர்கள் மாலைகளினால் அலங்கரித்தல்

✍ **அங்கசரணம்** - ஒப்பனை செய்தல், முகப்பூச்சு, வர்ணம் போன்றவை பூசுதல்

✍ **சஞ்சீவம்** - உயிருள்ள உயிரினங்களினைப் பயன்படுத்தல்

18) நடிகருடன் தொடர்புபட்ட ஆஹார்யம் எது?

✍ அலங்காரம், அங்கசரணம்

19) அரங்கத்தில் உள்ள பொருட்களுடன் தொடர்புபட்டவை எவை?

✍ புஷ்டம், சஞ்சீவம்

20) சாத்விக அபிநயத்தின் இரு முக்கிய அம்சங்கள்?

✍ இரசம், பாவம்

21) சாத்விக அபிநயத்தின் இரு வகைகள்?

✍ **சாட்சுஷிய சாத்விகம்** - பாத்திரம் கண்களைக் கொண்டு அபிநயித்தல்

✍ **வியஞ்சகம்** - கண், தலை என்பவற்றால் அபிநயித்தல்

22) சாத்விக பாவங்கள் எட்டும் எவை?

✍ ஸ்தம்பம் - ஸ்தம்பித்தல்

✍ பிரளய - மூர்ச்சித்தல்

✍ ரோமாஞ்ச - புல்லரித்தல்

✍ ஸ்வேத - வியர்த்தல்

✍ வைவர்ணய - நிறமாற்றம்

✍ வேபது - நடுங்குதல்

✍ அஷ்ரு - கண்ணீர் சொரிதல்

✍ வைஸ்வர்ய - குரல்மாற்றம்

## பக்தி மார்க்கம்

1) வடமாநிலத்திலே இராமனை வழிபடும் தெய்வமாகக் கொண்டு துளசி இராமாயணத்தை உருவாக்கியவர் யார்?

✍ துளசிதாசர்

2) பக்தி மார்க்கத்தின் வகைகள் எவை?

✍ மாதுரிய பக்தி ✍ லாவண்ய பக்தி ✍ மூர்க்க பக்தி ✍ சாக்கிய பக்தி ✍ வாத்சல்ய பக்தி

3) கடவுளின் சௌந்தர்ய அலங்காரங்களை வர்ணிக்கும் பக்தி யாது?

✍ லாவண்ய பக்தி ✍ மாதுரிய பக்தி

4) மூர்க்க பக்தியில் முரட்டுத்தனமான பக்தியை வெளிப்படுத்திய நாயனார் யார்?

✍ கண்ணப்ப நாயனார்

5) சாக்கிய பக்தியில் கண்ணனை தோழனாகவும், குழந்தையாகவும் பாவித்து பாடியுள்ளவர் யார்?

✍ பாரதியார்

6) தென்நாட்டில் பக்தி மார்க்கத்தை வெளிப்படுத்துவன எவை?

✍ஆழ்வார்கள், ஆண்டாள் பாடல்கள், இராமாயணம், மகாபாரதம் போன்ற வைஷ்ணவ நூல்கள், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசருடைய தேவாரங்கள், பெரியபுராண, கந்தபுராண, திருவெம்பாவை பாடல்கள்

## தாளதசப் பிராணன்கள்

1) தாளதஸப் பிராணன்கள் எவை?

✍காலம் ,மார்க்கம் ,கிரியை ,அங்கம் ,கிரஹம் ,ஜாதி ,களை ,லயம் ,ஜதி ,பிரஸ்தாரம்

2) தாளதஸப்பிராணன்களில் மகா பிராணன்கள் எவை?

✍காலம் ,மார்க்கம் ,கிரியை ,அங்கம் ,கிரஹம்

3) தாளதஸப்பிராணன்களில் உப பிராணன்கள் எவை?

✍ஜாதி ,களை ,லயம் ,ஜதி ,பிரஸ்தாரம்

4) காலத்தின் அளவை எது நிர்ணயிக்கிறது?

✍தாளத்தின் ஒவ்வொரு எண்ணிக்கையும்

5) தாளத்தை எப்படி போட வேண்டும் என நிர்ணயிப்பது?

✍மார்க்கம்

6) கிரியை என்பது யாது?

✍தாளம் எப்படி போட வேண்டும் என்ற செயன்முறையை குறிக்கிறது

7) லகுவின் கால அளவைக் கொண்டு மாத்திரையை நிச்சயப்படுத்தும் நூல் எது?

✍சங்கீத ரத்னாகரம்

8) கிரியையின் இருபிரிவுகள் எவை?

✍மார்க்கம் ✍தேசிகம்

9) தாளத்தில் ஷடாங்கங்கள் எவை?

✍லகு, த்ருதம், அனுத்ருதம், குரு, புலுதம், காகபாதம்

10) கிரஹம் என்றால் என்ன?

✍பாடல் அல்லது ஜதியின் தொடக்கம்

11) கிரஹத்தின் இரு வகைகள் எவை?

✍சமகிரஹம், விஷமகிரஹம்

12) விஷம கிரஹத்தின் இரு பிரிவுகள் எவை?

✍அதீத கிரஹம், அநாகதகிரஹம்

13) அதீத கிரஹம் என்பது யாது?

✍பாடல் என்றாலும், ஜதி என்றாலும் தாளம் தொடங்கமுன் ஆரம்பித்தல்

14) தாளம் தொடங்கிய பின் பாட்டு அல்லது ஜதியை ஆரம்பிப்பது எது?

✍அனாகதகிரஹம்

15) ஜாதி என்பது யாது?

✍லகுவின் எண்ணிக்கையை குறிக்கிறது (இது ஐந்து வகைப்படும்)

16) களை என்பது எதனை நிர்ணயிக்கிறது?

✍ஆவர்த்தனம் ஒவ்வொரு அட்சரமும் எத்தனை மாத்திரை கொண்டுள்ளதை குறிக்கும்

17) தாளத்தின் வேகம் அல்லது காலப்பிரமாணத்தைக் குறிப்பது எது?

✍லயம்

18) ஜதியின் ஆறுவகையும் எவை?

✍சமஜதி அல்லது பிபிலிக ஜதி

✍கோபுச்ச ஜதி → மாட்டின் வால் போன்றது

✍விஷம ஜதி → விருக்ஷ ஜதி

✍டமருக ஜதி → உடுக்கு வடிவில் அமைந்த ஜதி

✍மிருதங்க ஜதி → மிருதங்க வடிவில் அமைந்த ஜதி

✍ஸ்ரோதவாக ஜதி அல்லது பர்வத ஜதி → மலை, சிகர வடிவில் அமைந்த ஜதி

20) அறுவகை ஜதிக்கும் இசைக்கருவிகளின் பெயர்களை வீ.ப.கா.சுந்தரம் என்பவர் தமிழிசை வளத்தில் எவ்வாறு கூறுகிறார்?

| | | | |
|---|---|---|---|
| ✍சமஜதி | - புல்லாங்குழல் | ✍விஷமஜதி | - சங்கு |
| ✍மிருதங்க ஜதி | - மிருதங்கம் | ✍டமருக ஜதி | - உடுக்கு |
| ✍கோபுச்ச ஜதி | - முரசு | ✍ஸ்ரோதவாக ஜதி | - நாதஸ்வரம் |

## அபிநய தர்ப்பணம்

1) அபிநயத்தின் கண்ணாடி என பொருள்படும் வடமொழியில் அமைந்த நந்திகேஸ்வரரால் இயற்றப்பட்ட நூல் எது?

✍அபிநய தர்ப்பணம்

ZICTEC

2) அபிநய தர்ப்பண நூலின் ஸ்லோகங்கள் எத்தனை?
✍324

3) ஆங்கிகம் புவனம் என்ற சிவனுக்குரிய ஸ்லோகத்துடன் தொடங்கும் நூல் எது?
✍அபிநய தர்ப்பணம்

4) அபிநய தர்ப்பணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
✍ஆனந்த குமாரசுவாமி

5) அபிநய தர்ப்பணத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?
✍டாக்டர்.உ.வே.சுவாமிநாத ஐயர்
✍1957ல் வீரராகவன்

6) அபிநய தர்ப்பணத்தில் உள்ளடங்குபவை எவை?
✍நாட்டிய உற்பத்தி, நாட்டிய புகழ்ச்சி, நடன அபிநயவகைகள், சபா, சபாபதி, மந்திரி இலட்சணம், ஐந்து ஹஸ்தங்கள், பாத்திர இலட்சணம், சிரோ, கிரீவா பேதங்கள், பாத்திர கிரமம், அபிநயமும், வகையும், ஒற்றைக்கை, இரட்டைக்கை முத்திரைகள், பாதபேத 4 விரிவான வகைகள் என்பன

7) அபிநய தர்ப்பணத்தில் பிற்சேர்க்கையாக சேர்க்கப்பட்டவை எவை?
✍மகாபாரத சூடாமணியில் சொல்லப்பட்ட தாவர, பறவை, விலங்குகளின் முத்திரைகள்

## நாட்டிய சாஸ்திரம்

1) வடமொழியில் பரத முனிவரால் எழுதப்பட்ட நூல் எது?
✍நாட்டிய சாஸ்திரம்

2) நாட்டிய சாஸ்திரத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?
✍திரு.எஸ்.ஸ்ரீராமதேசிகன்

3) நாட்டிய சாஸ்திர தமிழ் மொழிபெயர்ப்பு எப்போது வெளியிடப்பட்டது?
✍உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 2001ம் ஆண்டு

4) நாட்டிய சாஸ்திரம் எத்தனை அத்தியாயங்கள் கொண்டது?
✍36

5) பாவம், இராகங்கள், தாளங்களின் சேர்க்கை பரதம் என 13ம் நூற்றாண்டில் யார் எந்த நாடகத்தில் குறிப்பிட்டுள்ள
✍வேதாந்த தேசிகர் எனும் வைணவ ஆசிரியர்
✍ஸங்கல்ப சூர்யோதயம் என்ற நாடகத்தில்

6) நாட்டிய சாஸ்திரத்தை தெலுங்கில் மொழி பெயர்த்தவர் யார்?
✍வடமொழி புலவரான மானவல்லி இராமகிருஷ்ணன்

7) நாட்டிய சாஸ்திர உள்ளடக்கம் எவ்வாறானது?
✍1-27, 34-36 → நாடக நடனம் பற்றி
✍28-33 → இசை பற்றி

8) நாட்டிய சாஸ்திரத்தில் 1,2,3 அத்தியாயங்களுள் குறிப்பிடப்பட்டவை எவை?
✍1வது → நாட்டிய சாஸ்திர வரலாறு
✍2வது → நாட்டிய அரங்கு, அவை கட்டிய முறை
✍3வது → புதிதாக கட்டிய அரங்கு மன்றங்கள்

9) நாட்டிய சாஸ்திரத்தில் நான்காவது அத்தியாயத்தில் கூறியவை எவை?
✍பிரம்மன் அரங்கேற்றம் செய்த அம்ருத மதனம் நிருத்திய நாடகம்
✍திரிபுர தாண்டவம் நடித்துக் காட்டியது பற்றி
✍சிவனின் தாண்டவ விளக்கம்
✍108 கரண விளக்கம்

10) நாட்டிய சாஸ்திரத்தில் 5,6,7 அத்தியாயங்களுள் குறிப்பிடப்பட்டவை எவை?
✍5வது → நாட்டியம் நிகழ முன் அரங்கில் செய்ய வேண்டியது
✍6,7வது → சுவை எட்டு, அவை செய்ய வேண்டிய அபிநயமுறை

11) நாட்டிய சாஸ்திரத்தில் 8,9 அத்தியாயங்களுள் குறிப்பிடப்பட்டவை எவை?
✍8வது → உடல் உறுப்புகளின் துணை கொண்டு செய்யும் அபிநயம்
✍9வது → ஒற்றைக்கை, இரட்டைக்கை, மார்பு, விலாபுற, இடுப்பு அசைவுகள்

12) கண், செயல் இவைகளால் தன் காதலை வெளிப்படுத்தும் அபிநயம் எத்தனையாவது?
✍10வது

ZICTEC

13) நாட்டிய சாஸ்திரத்தில் 11,12 அத்தியாயங்களுள் குறிப்பிடப்பட்டவை எவை?

✍11வது → சாரி அசைவு

✍12வது → மண்டலங்கள் பற்றி

14) நாட்டிய சாஸ்திரத்தில் 13ம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டவை எவை?

✍நாடகத்தில் தோன்றும் கதாபாத்திரம் எவ்வாறு மேடையில் நடக்க வேண்டும் என்பது பற்றி

✍பறவை, மிருகங்களின் கதி

✍படகில் செல்லுதல், குதிரை ஏற்றம் பொருத்தமான நடைகள்

15) நாட்டிய சாஸ்திரத்தில் 14,23 அத்தியாயங்களுள் குறிப்பிடப்பட்டவை எவை?

✍லோகதர்மி

✍நாட்டியதர்மி

16) பண்டைய இந்திய நகரங்களின் பெயர்கள், கிராமங்களின் பெயர்கள் குறிப்பிட்ட அத்தியாயங்கள் எவை?

✍14வது, 18வது, 21வது

17) நாட்டிய சாஸ்திரத்தில் 15,16 அத்தியாயங்களுள் குறிப்பிடப்பட்டவை எவை?

✍15வது → வாக்கியா அபிநயம்

✍16வது → சண்டோவிஸிட்டி பற்றியும்

18) நாட்டிய சாஸ்திரத்தில் 17ம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டவை எவை?

✍நாடகத் தயாரிப்பு முறை

✍நாடக இலக்கியம்

✍காப்பிய யாப்பு

✍சமஸ்கிருதம், கிராகிருத மொழிகள்

✍36 வகை குணங்கள்

19) பாஷவிதான, வாக்கியவிதான பற்றி கூறும் அத்தியாயங்கள் எவை?

✍18வது, 19வது

20) நாட்டிய சாஸ்திரத்தில் 20வது அத்தியாயத்தில் வர்ணித்தவை எவை?

✍தஷவித ரூபகங்கள் என்ற பத்து வகையான நாடகங்கள்

✍லாஸ்ய ஆடல் வகை வடிவங்கள்

21) நாட்டிய சாஸ்திரத்தில் 21,22,23 அத்தியாயங்களுள் குறிப்பிடப்பட்டவை எவை?

✍21வது → நாடக கதை அமைப்பு

✍22வது → நால்வகை விருத்தி

✍23வது → ஆஹார்ய அபிநயம் பற்றி

22) நாட்டிய சாஸ்திரத்தில் 24வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டவை எவை?

✍நாடக தலைவன், தலைவி, சூத்திரதாரன், நாட்டியமங்கை ஆகியோரின் இலக்கணம்

23) இரவு, பகல், நிலா, மகிழ்ச்சி, பகலவன் பயன்படுத்தும் முறை, அபிநயங்களை விளக்கிய பகுதி அத்தியாயம் எது?

✍25வது

24) நாட்டிய சாஸ்திரத்தில் 26வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டவை எவை?

✍ஆண் → பெண்ணாகவும்

✍பெண் → ஆணாகவும்

✍இளைஞன் → வயோதிபனாகவும்

✍வயோதிபன் → இளைஞனாகவும் வேடமிடும் போது கவனிக்க வேண்டியவை

25) நாட்டிய வெற்றி பெற தேவையானவை பற்றி கூறிய அத்தியாயம் எது?

✍27வது

26) நாட்டிய சாஸ்திரத்தில் இசை, பண், தாளம், தாளஜதிகள் பற்றி குறிப்பிட்ட அத்தியாயம் எது?

✍28வது - 33வது வரை

27) நாட்டிய சாஸ்திரத்தில 34வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டவை எவை?

✍தாளக்கருவிகளின் விளக்கம்

28) நாட்டிய சாஸ்திரத்தில் 35வது, 36வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டவை எவை?

✍35வது → பாத்திரம் தேர்ந்தெடுக்கும் முறை

✍36வது → நடனத்தின் பயன் பற்றி

ZICTEC

# சாஸ்திரிய நடனங்கள் - 7

## சாஸ்திரிய நடனங்கள்

- தென் இந்தியா
  - பரத நாட்டியம்
  - கதகளி
  - குச்சுப்புடி
  - மோகினியாட்டம்
- வட இந்தியா
  - கதக்
- கிழக்கு இந்தியா
  - மணிப்புரி
  - ஒடிசி

## பரதநாட்டியம்

- ✍ தென்னிந்தியாவில் தோற்றம் பெற்றது.
- ✍ பரத முனிவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✍ பாவம், இராகம், தாளம் என்பவற்றின் விளக்கம்.
- ✍ நடனத்தின் உட்பிரிவின் விளக்கம்.
- ✍ நால்வகை அபிநய விளக்கம்.
- ✍ புராண வரலாறு, தாண்டவ, லாஸ்ய விளக்கம்
- ✍ அடவு, கோர்வை, தீர்மானம், விளக்கம்
- ✍ பரதநாட்டிய உருப்படிகளின் இலட்சண விளக்கம்.
- ✍ வரலாற்றுக்காலங்களில் பரதநாட்டியம் இருந்த தன்மையின் விளக்கம்.
- ✍ இசை - கர்நாடக இசை
- ✍ இசைக்கருவி - தாளம், மிருதங்கம், வயலின், புல்லாங்குழல்
- ✍ உடை - காலத்திற்கேற்ப மாற்றம், முன்பு பிஜாமா, ஒன்பது முழச்சீலை, நாட்டிய நாடகத்தில் பாத்திரத்திற்கேற்ப உடை, பஞ்சகச்சம்
- ✍ அணிகலன் - தலை முதல் கால் வரை தங்கநிறத்தால் ஆன அணிகலன்களின் விளக்கம்.
- ✍ ஒப்பனை - கண் மை, பவுடர் போன்ற ஒப்பனைப் பொருட்களின் விளக்கம்.

ZICTEC

# கதகளி

- தென்னிந்தியாவில் உள்ள கேரள மாநிலத்திற்குரிய நடனம்.
- கூடியாட்டம் காலங்காலமாக பேணப்பட்ட நாடகப்பாணி வழிபாடுகளும், சடங்குகளும் மலிந்த ஆடல் வகைகள் கதகளி உருவாகுவதற்கு முன்னோடி ஆகும்.
- கதகளியின் உத்திகள் - உடற்பயிற்சி, உடலைத் தேய்த்துப் பிடித்துச் சீர்செய்தல், அபூர்வக்கால் நீட்டுதல், குதித்தல், பாய்தல், வாள்பயிற்சி என்பனவாகும்.
- 17வது நூற்றாண்டில் (1650) தான் தனியொரு நடன நாடகப் பாணியாக உருவாகியது.
- 1650ல் கள்ளிக்கோட்டை ஸாமரின் அரசன் கிருஷ்ண பக்தர் அதனால் ஜயதேவரின் உணர்வுப்பாடல்களான கீதகோவிந்தத்தைப் போல் கிருஷ்ணராட்டம் என்ற பெயரில் நாடகங்கள் எழுதி 8 நாடகங்களை 8 இரவு போடும் படியதாக அமைக்கப்பட்டது.
- கொட்டாரக்கரை அரசர் கிருஷ்ணராட்டம் நிகழ்த்துவதற்காகத் திருவாங்கூருக்கு அந்த நடிகர் குழாத்தை அனுப்பும்படி கள்ளிக்கோட்டை ஸாமரினைக் கேட்க அவர் மறுத்துவிட்டார்.
- எனவே கொட்டாரக் கரை அரசர் இராமனாட்டம் என்ற 8 நாடகங்களைக்கொண்ட தொடரைக் கிருஷ்ணராட்டத்துக்குப் பதிலாக எழுதி 17ஆம் நூற்றாண்டின் பின் நடிக்க வழி செய்தார்.
- இதனால் கிருஷ்ணராட்டம், இராமனாட்டத்தை கேரளம் பெற்றுக்கொண்டது.
- இசை பாடுபவர் துணை செய்ய விரிவான உடல் அசைவு நிருத்தமானது வசனம் பேசாத நடிப்பிற்கு மெருகு சேர்த்தது.
- நடிக்கப்பட்ட நாடகங்கள் மகாபாரதம், பாகவத புராணம், சிவபுராணம், இன்னும் பல புராணங்களிலிருந்து எடுக்கப்பட்டது.
- ஒப்பனையின் நோக்கம் முகத்தை மூடுவது மட்டுமன்றி பாத்திரமாகவே மாற்றுவது.
- ஒப்பனைக்காரன் **சௌட்டிக்காரன்** என அழைக்கப்பட்டான்.
- சாத்வீக பாவம் → பச்சை வர்ணம்
  கன்னங்களில் இருந்து தாடை எலும்பு வரை மந்தமான பச்சை நிறமுள்ள சுண்ணாம்பு பூசப்படுகிறது.
  நெற்றிக்கு வெள்ளைச் சுண்ணாம்பு
- மூர்க்கத்தனமான பாத்திரம் → தாடி ஒப்பனை
  குரூரமான கருமீசை
- கருந்தாடி → கதாநாயகனின் எதிரி
  அரக்கர்களைக் குறிப்பது
- வெண்தாடி → அனுமான் போன்ற தெய்வத்திற்கு ஒப்பனை
- இப்போதைய கதகளி நடனத்திற்கு பங்களிப்பு செய்தவர்கள் கார்த்திகைத் திருநாள், அசுவதி திருநாள், வித்வான் குயில்தம்பிரான் முக்கியமானவர்கள்.
- திருவாங்கூர் மகாராஜாக்களாகிய சுவாதி திருநாள், இராமவர்மா ஆகியோர் நடனத்திற்கு பங்களிப்பு செய்தனர்.
- தெற்கத்திய பாணி, வடக்கத்திய பாணி என இரு பாணிகள் தோற்றம் பெற்றது.
- பலராம பாரதத்தின் உப அத்தியாயம் ஒன்றில் கதகளியின் அசைவுகளான முட்டி வளைதல், பாத நீட்டல் போன்ற அங்க அசைவுகள் பற்றி குறிப்பு உண்டு.
- இதனை ஒட்டி எழுதிய நூல் **ஹஸ்தலஷ்ண தீபிகா** ஆகும்.
- அடிப்படை கதகளி அசைவு பற்றி 16வது நூற்றாண்டில் ஆதாரம் ஏற்பட்டுவிட்டது.
  - கேரள கோயில் சிற்பங்கள்
  - பத்மநாபசுவாமி கோயில் ஓவியங்கள்
  - மட்டன்சேரி கோயில் ஓவியங்கள் சாட்சியாக உள்ளன.
- 20ம் நூற்றாண்டில் தெய்வம், பகவதி வழிபாடு ஆகியவை தொடர்ந்து நடக்க கூடியாட்டம், கதகளி, கிருஷ்ணராட்டம், இராமனாட்டம் மங்கி வரத்தொடங்கியது.
- இதனை புத்துயிர் பெறச் செய்தவர்
  கேரளாவின் **கவிவள்ளத்தோல் நாராயணமேனன் 1932ல்** தொடங்கிய **கேரள கலாமண்டலம் 1936ல்** முறையாக நிறுவப்பட்டது. இவருடன் **குரு இராமுண்ணிமேனன், குரு குஞ்சுகுருப்** போன்றோர் சேர்ந்தனர்.
- **ஆட்டமுறை**
  - சிருங்கார ரஸம் காணப்படும்.
  - வீரம், கோபம் போன்ற மனோபாவங்கள் வெளிப்படும்.
  - மிக நுணுக்கமான முறையில் கை, கால் அசைவு காணப்படும்.

- அபிநயம் 3 பகுதி உள்ளது.
  - ஒவ்வொரு வார்த்தையில் பொருள் விளக்கும் அபிநயம்
  - ஒரு முழு அடியை விளக்கும் அபிநயம்
  - பாடகரை பின்பற்றும் நாட்டியக்காரர்

**ஆடை, அணிகலன் ஒப்பனை**

- கதை மாந்தரின் குண இயல்புகளைக் காட்டும் குறியீடாக ஒப்பனை கொள்ளப்படும்.
  - பச்சை - நற்குணம்
  - சிவப்புத்தாடி - தீயகுணம்
  - கறுப்புத்தாடி - பூர்விக குடிகள் அல்லது வேடுவர்கள்
  - வெண்தாடி - பாதி மனித உரு, பாதி அனுமான் உரு
  - இளம்பச்சை - சிருங்காரம்
  - சிவப்பு - ரௌத்திரம்
  - மஞ்சள் - அற்புதம்
- ஒப்பனைகள் அரிசி மாவில் பலவித வண்ணப்பொடிகளை கலந்து கதாபாத்திரத்திற்கு ஏற்ப மணிக்கணக்கில் ஒப்பனை செய்வார்.
- கிரீடம், புஜகீர்த்தி பயன்படுத்தப்படும்.
- கதையின் பாத்திரத்திற்கு ஏற்ப ஆடை, அணிகலன் அணியப்படும்.

**இசைக்கருவி**

- சோபன இசை
- சுத்த மத்தளம், சேங்கலம், செண்டை, கைமணி, இடக்கை, எலத்தாளம் (இலைத்தாளம்) பயன்படுகிறது.

**கலைஞர்**

- இட்டிராரிச்சமேனன்
- புதியய்க்கல்தம்பான்

## குச்சுப்புடி

### தோற்றம், வளர்ச்சி

- ஆந்திர பிரதேச நடனம்.
- கிருஷ்ணா மாவட்டத்தில் திவி தாலுகாவிற்குட்பட்ட ஒரு கிராமம் குச்சுப்புடியாகும்.
- பிராமணர்களால் உருவாக்கப்பட்டது.
- கோல்கொண்டா மன்னரான **அப்துல் கஷன் தனேசா** காலத்தில் நடனம் வளர்ந்தது.
- குச்சுப்புடி நாட்டிய நாடகத்தை முதலில் வடிவமைத்தவர் **சித்தேந்திர யோகி**
- நாட்டிய அமைப்புகளில் பாமா கலாபம் அதிகம் போற்றப்படும்.
- இளம் பிராமணர்களுக்கு கற்பித்ததால் ஆண்களுக்கான நடனமாக கருதப்படுகிறது.

### நடன அமைப்பு, தன்மை

- ஒவ்வொரு பாத்திரமும் மேடைக்கு வந்து ஒரு சிறிய பாடலுடன் (தரு) ஆடலுடன் தம்மை அறிமுகப்படுத்துவர்.
- கதாபாத்திரத்திற்கு தம்மை தயார்படுத்துதல்.
- பாமா கலாபம், கொல்லா கலாபம் ஆகிய இரு நடன நாடகங்கள் உண்டு.
- கரி மாதவய்யா கலையில் சிய புதுமைகள் ஏற்படுத்தியவர்.
- இவரது சீடர்களான **சிந்தா வெங்கடரத்தினம், சிந்தா வேங்கட ராமய்யா** பல கலைஞர்களை உருவாக்கினார்கள்.
- வேதாந்தம் லக்சுமிநாராயணன் சாஸ்திரி காலத்திற்கேற்ப பல புதிய அம்சங்களை புகுத்தினார்.
- வேம்படி சின்ன சத்தியத்தின் மாணவர்களாக சந்திரகலா, வைஜந்திமாலா, சோபா நாயுடு, ஹேமமாலினி, யாமினி கிருஷ்ணமூர்த்தி, ஜயலலிதா, பத்மா மேனன் ஆகியோர் காணப்பட்டனர்.
- குச்சுப்புடி நடன ஆசிரியர்கள் வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய அடங்களில் உள்ளனர்.
- இந்து சமய புராணங்களில் வரும் காட்சிகள், பாத்திரங்கள், அவற்றில் வரும் மாயைகள், நாட்டிய நாடகங்கள் தனி நடனமாக காணப்படும்.
- குச்சுப்புடி நடனத்தில் வசனம் பேசும் அம்சம் காணப்படும். அது ஏனைய நடனத்தில் இருந்து வேறுபடுகிறது.
- சாதவாகன மன்னர் கலையை ஆதரித்தனர்.

ZICTEC

- இவர் அமைத்த விஷ்ணு ஆலயத்தில் காலை, மாலை நடனமாட 300 தேவதாசிகள் நியமிக்கப்பட்டனர்.
- ஆரம்ப கால நடனம் சைவசமய சார்புடையது.
- சிவலீலா, விஷ்ணு லீலா நடனங்கள் சைவ, வைஷ்ணவ கோயில்களில் இடம்பெற்றது.
- **ஐயப்பா நாயக்கரினால்** எழுதப்பட்ட **நிருத்த ரத்னா வலீ** நடன சாஸ்திர முக்கிய நூலாகும்.
  - இந்நூலில் தேசீ, மார்கீ நடனங்களுக்கு வரைவிலக்கணப் படுத்தப்படுகிறது.
  - நடன சாஸ்திரம் நடன செய்கையில் தேர்ச்சி பெற்ற குந்த மாத்ய எனும் சிறந்த அந்தண ஆசிரியரின் மாணவராவார்.
  - ஐயப்பா தேவதாசிகளுக்கும், அரச சபை நர்த்தகிக்களுக்கும் நடனம் அமைத்தார்.
  - ஐயப்பா எனும் கலைஞரே குறிப்பிட்ட பௌராணிகக்கதையில் வரும் அனைத்துப் பாத்திரங்களாகவும் ஆடும் நாடக பாணியிலான யக்ஷ கானங்களையும் அமைத்துக் காட்டினார்.
- கிருஷ்ணன், ராதை பற்றிய பாடல்களும் **ஸ்ரீ கிருஷ்ண ஜலகிரீட** எனும் நடன நாடகமும் **நரஹர தீர்த்தரின்** மாணவனாகிய **கோபாலகிருஷ்ண சரஸ்வதியால்** எழுதப்பட்டன.
- குச்சுப்புடி கிராமம் நீண்டகால இசை, நடன மையமாகும்.
- குசீலவபுரம் (நடன, நாடகக்காரன் கிராமம்) எனும் பெயர் சுருங்கி குச்சுப்புடி ஆயிற்று.
- விஜய நகரப் பெருமன்னர் கலையை ஆதரித்தனர்.
- பாகவதர்களால் ஆடப்பெற்ற நடன நாடக கலை பாகவதமேளம் எனப்படும்.
- குச்சுப்புடி நடன நாடகம் கோவிலுக்கு முன் அமைக்கப்பட்ட அரங்கில் இரவில் நடைபெறும்.
- அரங்கிற்கு வெளிச்சமூட்ட இரு விளக்குகள் உண்டு.
- பல நிறங்கள் கொண்ட திரைச்சீலை வைத்திருப்பர்.
- வாய்ப்பாட்டு, மிருதங்கம், சல்லாரி முதலியன இடம்பெறும்.
- ஆண்கள் பெண் பாத்திரங்களாகவும் பங்குபற்றுவர்.
- பாடலின் பொருள் அபிநயம், ஊமை நாடகம், நடனம் முதலியவற்றால் புலப்படுத்தப்படும்.
- நடன நாடகங்களாக ராமநாடகம், ருக்மணி கல்யாணம், பிரகலாத சரித்திரம், பாணாகரன், பாமாகலாபம் போன்றவை காணப்படுகின்றன.
- கலைஞர்கள் விரும்பும் நாடகமாக **சித்தேந்திரயோகியின் பாமா கலாபம்** விளங்குகிறது.
- கிருஷ்ண பகவானின் இளம்பிராய வாழ்க்கை பற்றி கூறும் நூல் **கிருஷ்ணலீலா தரங்கினி** ஆகும்.
- இந்நூலின் ஆசிரியர் பெயர் **தீர்த்த நாராயணயதி** ஆவார்.

- **ஆட்டமுறை**
  - குதித்தாடும் ஆட்டமுறை அதிகம் காணப்படும்.
  - **பாமகலாபம், பாரிஜாதபகனம்** ஆகிய நாடகங்கள் உண்டு.
  - சஞ்சாரி பாவங்கள் நிறைந்த வர்ணங்கள், தெலுங்கு மொழிப்பாடல்கள் உண்டு.
  - பதம், தரு, தரங்கம், சப்தம் போன்றன உண்டு.
  - **சிருங்கார பாவம்** காணப்படும்.
  - **பாலகோபால தரங்கம்** ஆடும்போது தாம்பாள தட்டின் விளிம்பில் நின்று ஆடுவர்.
  - செம்பை தலையில் வைத்துக் கொண்டு கைகளில் விளக்குகள் ஏந்திக் கொண்டு ஆடுவார்கள்.

- **ஆடை, அணிகலன் ஒப்பனை**
  - ஒப்பனை மிகவும் எளிமையானது.
  - மூலிகை, காய்கறிகளில் தயாரித்த குழம்புகளை பயன்படுத்துவர்.
  - மஞ்சள், சிவப்பு, துத்தநாகம் போன்றவற்றை தேங்காய் எண்ணெயுடன் கலந்து முகத்தில் பூசுவர்.
  - கண்மை கொண்டு கண்களை பெரிதாக்குவார்.
  - பெண் கலைஞர்கள் எடுப்பான நிறத்தில் ஆடை அணிவார்கள்.
  - புடவை நடுப்பகுதி இடுப்பில் சுற்றி, ஒரு பகுதியை வலக்காலைச் சுற்றி, மறுபகுதி இடதுகாலைச் சுற்றி உடுப்பார்
  - 32 வகை ஆபரணங்களை நடன மங்கை அணிவர்.
  - **புறுகு** எனப்படும் பாரம் குறைந்த மரத்தால் செய்த லேசான அணிகலன்கள் அணிவர்.
  - வண்ண காகிதம், கண்ணாடித் துண்டு கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
- **இசைக்கருவி**
  - கர்நாடக இசை பயன்படும்.
  - மிருதங்கம், கடம், தம்புரா, வீணை, புல்லாங்குழல் அல்லது வயலின்
  - ஜதி சொல்லும் நட்டுவனார்
  - முற்காலத்தில் கிளாரிகொட் தற்போது இல்லை.


ZICTEC

- **கலைஞர்**
  - டாக்டர் ஸ்ரீவேம்படி சின்ன சத்யம்
  - பேரய்யா சாஸ்திரி
  - லக்சுமி நாராயண சாஸ்திரி
  - சிந்தா வெங்கடரத்னம்
  - சிந்தா வேங்கடராமையா

# மோகினியாட்டம்

## தோற்றம், வளர்ச்சி

- மோகினியாட்டம் பெண்களால் ஆடப்படும் கேரளத்தின் லாஸ்ய நடனமாகும்.
- திருமால் மோகினி வடிவம் தாங்கி வடிவம் தாங்கித் தேவர்களின் நலனைக் காக்கும் வகையில் அசுரர்களை மயக்கி, அவர்களின் அழிவுக்குக் காரணமாயிருந்தார் என்று கூறுகின்றன.
- அதனை அடிப்படையாகக் கொண்டது மோகினியாட்டம் ஆகும்.
- கி.பி 3 முதல் கி.பி 8 நூற்றாண்டுக்கு இடைப்பட்ட பகுதியில் தான் பெண்கள் ஆடும் நடனம் என பதியப்பட்டுள்ளது.
- தாசியாட்டத்தின் (சதிராட்டம்) கேரளப் பதிப்புத்தான் மோகினியாட்டம் ஆகும்.
- கி.பி 1709ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **திரு மழமங்கலம் நாராயணன் நம்பூதிரி** என்னும் சமஸ்கிருத அறிஞனால் இயற்றப்பட்ட **வியவஹார மால** எனும் இலக்கியத்தில் மோகினியாட்ட குறிப்புகள் உண்டு.
- மோகினியாட்ட குறிப்புகள் வடமொழியிள்ள கந்துக தந்திரம் என்னும் நூலில் உண்டு.
- திருவாங்கூர் மன்னரான மார்த்தாண்டவர்மாவின் அவைக்கவிஞரும் துள்ளல் எனும் நடனத்தை உருவாக்கியவருமான **குஞ்சன் நம்பியார்** எழுதிய **கோஷயாத்ரா** என்னும் நூலில் மோகினியாட்ட குறிப்புகள் உண்டு.
- நம்பியார் குத்து, பதக்கம், பாவைக் கூத்து, திருவாதிரைக்களி ஆகிய நடனங்களுடன் மோகினியாட்டத்தையும் குறிப்பிடுகின்றார்.
- நாட்டிய சாஸ்திரத்தைப் பற்றி மலையாளத்தில் எழுந்த ஆய்வு நூலான **பாலரமா பரதத்தில்** அதன் ஆசிரியர் கார்த்திகைத் திருநாள் மஹாராஜாவும் மோகினியாட்டத்தைக் கேரள நடன வடிவங்களுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார்.
- இசையிலும் நடனத்திலும் பெருவிருப்புடையவர்களான திருவாங்கூர் மன்னர்கள் மோகினியாட்டத்தை ஆதரித்தனர்.
- 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவாதித்திருநாள் மஹாராஜாவின் காலத்தில் மோகினியாட்டம் மிகுந்த செல்வாக்கு பெற்றது.
- மன்னரின் எதிர்பாராத மரணம் இந் நடனத்தின் சரிவிற்கு முக்கிய காரணமாகியது.
- கதகளியை பேணி வளர்த்த கேரள கலா மண்டலத்தை உருவாக்கிய **கவிவள்ளத்தோல் நாராயணமேனன்** மோகினியாட்டத்திலும் ஈடுபாடு கொண்டு அதனையும் ஆதரித்து வளர்த்தார்.
- கல்யாணி அம்மா, மாதவி அம்மா, சின்னமு என்னும் மூன்று மோகினியாட்டக் கலைஞர்கள் இருந்தனர். இவர்கள் குரு கிருஷ்ண பணிக்கரால் நன்கு பயிற்றப்பட்டவர்கள்.
- கல்யாணி அம்மா கேரள கலாமண்டலத்திலே மோகினியாட்ட ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.
- ராகினி தேவி, தங்கமணி (குரு கோபிநாத்தின் மனைவி) முதலில் இக்கலையினை அங்கு கற்றனர்.
- இவர்களுடன் மிருணாளினி சாராபாய், கனக்றெலே, சாந்தா ராவ் போன்றோர் உள்ளனர்.
- கனக்றெலே சட்டப்பட்டதாரி, மோகினியாட்டத்திலே கலாநிதிப்பட்டம் பெற்றவர்.

- **ஆட்டமுறை**
  - ஆட்ட அசைவுகள் அதிகமாகவும், குதித்தாடும் அடவுமுறைகள் குறைவாகவும் காணப்படும்.
  - கால்கள் இரண்டும் அகட்டி வைத்து ஆடுவார்கள்.
  - உருப்படிகளில் சிருங்கார ரசமும் லாஸ்யமும் அதிகம் காணப்படும்.
  - ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், சொற்கட்டு போன்ற வகை உருப்படிகள் இடம்பெறும்.
  - பந்தாட்டம் எனும் ஆடல்வகை மிக அழகாக ஆடப்படும்.
  - உடலை ஒரு பக்கத்திலிருந்து மற்றப் பக்கத்திற்கு அதிபங்கமாகவும் வேகமாகவும் கவர்ச்சியாகவும் வளைத்து ஆடப்படும்.
  - மெட்டொலி பாடலுக்கு ஏற்ப ஆட்டத்தின் வேகத்தில் வேறுபாடு காணப்படும்.


ZICTEC

✍ **ஆடை, அணிகலன் ஒப்பனை**

- ஜரிகை வேலைப்பாடுகள் கொண்ட வெள்ளைப் புடவை
- தலையின் வலது புறம் சாய்வாகக் கொண்டை போட்டு அதில் வெள்ளைப் பூக்களைச் சூடி ஆடுவார்.
- மோகினியாட்டத்தில் ஒன்பது கஜப்புடவை அழகான நிறைய மடிப்புக்களோடு கட்டப்படும்
- இடுப்புக்குச் சற்றுக் கீழே பாவாடைக்கு மேல் விசிறி போன்ற மடிப்புடன் ஒரு சிறிய பகுதித் துணியும் கட்டப்படும்.
- ரவிக்கையின் மேல் சிறு தாவணி போன்ற மேலாடையும் அணியப்படும்.
- கடுக்கன், குடைகடுக்கண், தோடு போன்ற காதணிகள்
- காசுமாலை, நீண்ட நெக்லெஸ், சிறிய நெக்லெஸ் அதாவது பூத்தாலி, இளக்கத்தாலி, நாகபடா தாலி
- முல்லை மொட்டு மாலை
- கடகம் போன்ற வளையல்களும் விரல்களில் மோதிரங்களும் இடுப்பில் ஒட்டியானமும் அணியப்படும்.
- தலையில் சுட்டி, சூரியபிறை, சந்திரபிறை ஆகிய ஆபரணங்கள் அணியப்படும்.
- காலில் கிண்கிணி, காற்சிலம்புகள்

✍ **இசைக்கருவி**

- கேரள பஞ்சவாத்தியங்கள் இசைக்கப்படும்.
- வீணை, குழல், சுத்தமத்தளம், இடக்கை, எலத்தாளம் (இலைத்தாளம்) பயன்படும்.

✍ **கலைஞர்**

- கல்யாணி அம்மா
- கனக்றெலே
- தங்கமணி

# மணிப்புரி

## தோற்றம், வளர்ச்சி

- இந்தியாவின் வடகிழக்கு பிராந்திய நடனம்.
- மணிப்பூர் என்ற இடத்தின் பெயரால் மணிப்புரி என்று அழைக்கப்படுகிறது.
- மணிப்பூரின் தலைநகரான **இம்பால்** இதன் கேந்திர நிலையம்.
- ஆரம்பத்தில் வாழ்ந்த மக்கள் சைவசமயத்தவர்கள். சிவன், பார்வதியை வழிபட்டனர்.
- பின்னர் வைஷ்ணவம் பரவ கிருஷ்ணன், ராதை வழிபாடு செய்தனர்.
- குஜராத், வங்காளம், ஒரிஸ்ஸா மக்கள் மணிப்பூரில் குடியேறினார்கள்.
- மால், டாங்குல், கபுயிக்கள், மெய்திக்கள் இன மக்களோடு தொடர்புபட்டது.
- மெய்திக்கள் தனிப்பண்பாடு உள்ள கூட்டத்தினர் ஆவார்.
- நாகர் இனத்து நடன கலைஞர் வாழுமிடம், மெய்திகளது நடன நிகழ்ச்சி நடக்குமிடம் சிறப்பான பண்பாடு பரவிய இடமாகும்.
- கி.பி.763ல் **ஸ்ரீஹரி** நாமம் சொல்லும் வைணவ வழிபாடு உள்ளது.
- வைணவத்தை ஏற்றுக்கொண்ட முதல் மணிப்பூர் அதிபர் **கரீப் நவாஸ்** என அழைக்கப்பட்ட **பாம்ஹேய்பா** அரசராவார்.
    - ★இவர் இராமநந்தர் கொள்கையால் ஈர்க்கப்பட்டார்.
    - ★சாந்திதாஸரின் சீடருமாவார்.
    - ★இங்கு **வங்கக்கீர்த்தனை** முறைகளும் சைதன்யரின் விசுவாசிகளுடைய இலக்கியமும் பரவியது.
    - ★கரீப் நவாசின் புதல்வி **இராஜஸ்ரீ பாக்கியச்சந்திரா** தந்தையைப் பின்பற்றுபவராகி
    - ★வங்காளத்து **நரோத்தமர்** தாசருடைய சீடரானார்.
    - ★சங்கீர்த்தனம், ரஸம் என்பவற்றைச் சார்ந்த இசை நடன மரபு தோன்றியது.
    - ★இவர் ரஸத்தை பற்றி அறிந்து அதற்கான ஆடை அணிகளைப் பெற்றது கனவில் தான்.
    - ★தம் புதல்வியையே இராதாவேடம் பூணுமாறு செய்தார் என வரலாறு கூறுகிறது.
    - ★இதனால் இவர் அரசுரிமையை துறந்து கிருஷ்ண பக்தியில் காலத்தை செலவிட்டார்.
    - ★அரசர் சந்திரகீர்த்தி காலத்தில் கிருஷ்ணபக்தி வலுப் பெற்றது.
- பக்தி ரஸங்களைப் பாடுவதும் சங்கீர்த்தனங்களில் 64 பாகங்களைப் பாடுவதும் அரச சபையில் முக்கிய நிகழ்வு.
- சங்கீர்த்தனம் என்பது நன்கு அமைக்கப்பட்ட ஒரு நடன கோர்வையாகும்.
- மணிப்புரி மக்கள் வாழ்க்கையை மகிழ்விக்கும் உற்சவங்களை நடைபெற்றது.
    - ★கிருஷ்ணருடைய வாழ்க்கையிலிருந்து ஒரு கணுவை எடுத்துக்கொண்டது.



ZICTEC

★பருவகால உற்சவங்களில் முதலிடம் வகிப்பது டொல் சந்ரா.
★ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரின் பிறந்தநாள் கொண்டாட்டம்.
★மூன்றாவது புராணத்தில் சொல்லப்படுகின்ற ஹோலிகர் பண்டிகை ( இதில் ஆடவரும் பெண்டிரும் தமக்குரிய வாழ்க்கைத்துணையை தேடிக் கொள்வார்)

- மணிப்பூரில் துக்கமான சந்தர்ப்பம் அல்லது சந்தோஷமான சந்தர்ப்பங்களில் இசையும் நடனமும் உண்டு.
- **வங்கதேசபாலா, அரிபாலா** இரண்டு நடன முறைகள் உருவாகியது.
- **நடபாலா** என்ற புதுவகை சங்கீர்த்தன முறை உருவாகியது.
- நடபாலாவில் மென்மையும் அழகும் தரும் பகுதிகள் உள்ளன.
- வேகமும் எழுச்சியும் தரும் தாண்டவ பகுதிகளும் உள்ளன.
- பெண்கள் ஆடிய ராச நடனம் பிரார்த்தனை, பாலப்பாடல், முழவோசை உள்ளடக்கியது.

- **ஆட்டமுறை**
  - மணிப்புரி நாட்டியம் ஆடவர்கள் தாண்டவ முறையிலும், பெண்கள் லாஸ்ய முறையிலும் ஆடப்படுகிறது.
  - ஆடவர் தாண்டவம் **சலனம், குன்தானம்** என பிரிக்கப்படுகிறது.
  - பெண்கள் லாஸ்யம் **சிபிதாங்கா, ஸ்புகிதாங்கா** என பிரிக்கப்படுகிறது.
  - லாஸ்ய நடனத்தில் பாதங்களை சிறிது தூக்கி தரையோடு ஒட்டிச் சறுக்குமாறு அசைத்து ஆடப்படுகிறது.
  - தாண்டவத்தில் **அகோங்க்பா** என்ற குதித்தல் விசேடமாகும்.
  - வைஹோராபா, கம்பாதோய்பி சைவசம்பிரதாயப்படி அமைந்த நடனமாகும்
  - **புங்சோளம்** என்ற நடனத்தில் டோல்கி என்ற மத்தளத்தைத் தோளில் மாட்டிக்கொண்டு சுழன்று சுழன்று ஆடுவார்.
  - **கர்தார் சோளம்** எனும் நடனம் பெரிய தாளங்களைத் தட்டிக்கொண்டு ஆடப்படும்.
  - இவை இரண்டும் சேர்ந்து சங்கீர்த்தனம் எனப்படும்.
  - உடல் செங்குத்தான நிலையில் இருக்கும்.
  - முகபாவம் சாந்தமான முறையில் கட்டுப்படுத்தி ஒரே மாதிரியான முகபாவம் இருக்கும்.
  - இடுப்பிற்கு மேல் பகுதி / இடுப்பிற்கு கீழ் பகுதி } 8 என்ற பின்னல் வளைந்து ஆடப்படும்
  - இடுப்பில் அசைவுகளே கொடுக்கப்படாமல் ஆடுவது இதன் சிறப்பு.
  - முதல் நடை / வாரநடை / கூட நடை } 3 நடைவேகத்தில் ஆட்டம் உண்டு

- **ஆடை, அணிகலன் ஒப்பனை**
  - பெண்கள் லுங்கி போன்ற பல வண்ண ஆடைகளை அணிந்து ஆடுவார்கள்.
  - கூடை போன்ற பாவாடை கட்டிக்கொண்டு தலையில் சரிகையிட்ட மெல்லிய துணியால் முக்காடிட்டு
  - அலங்காரச் சிறுமணிகள், கண்ணாடிச்சில்லுகள், மின்னும் தாள் பதிக்கப்பட்ட உடைகள்
  - வளையல்கள், கழுத்துச் சங்கிலி, மோதிரங்கள், கொலுசுகள் என்பவை பெண்கள் விரும்பி அணிவார்கள்.

- **இசைக்கருவி**
  - தென்னிந்திய தமிழ் இசைமரபு.
  - வட இந்திய ஹிந்துஸ்தானி இசை பயன்படும்.
  - மத்தளம், கைத்தாளம் இசைக்கருவி பயன்படும்.
  - மஞ்சிரா என்ற சிறுதாளம்
  - ஊதுகுழல், கெஞ்சிரா, புல்லாங்குழல்
  - கின்ரைட், கர்த்தால் என்ற பெரிய ஜால்ராக்கள் பயன்படும்.

- **கலைஞர்**
  - நாபகுழார்சிங்க
  - தோம்பா ஹயோபம்

# கதக்

**தோற்றம், வளர்ச்சி**

- வட இந்தியாவின் சாஸ்திரிய நடனம் ஆகும்.
- கதக் மிக முழுமையான மலர்ச்சி அடைந்தது என **நாட்டியமணி சீதாராதேவி** கூறுகிறார்.


ZICTEC

- ✍ கதக் நிலவும் மாநிலங்களாவன
  - ✎ராஜஸ்தான்
  - ✎மத்திய பிரதேசம்
  - ✎உத்தர பிரதேசம்
  - ✎குஜராத்
- ✍ கோயில்களில் நடனம் இருந்ததற்கான சான்று
  - ✎சிற்பங்கள்
  - ✎வழிபாட்டு முறை
- ✍ 14ம் - 18ம் நூற்றாண்டில் நிலவிய நடனமே இன்றை கதக் என **கலாநிதி கபிலவாஸ்யன்** கூறியுள்ளார்.
- ✍ கதக் நடன பாணியின் தொடக்கத்தை காணக்கூடிய இடங்களாவன
  - ✎சமண ஓவியங்களில்
  - ✎**கல்பசூத்திரம்** போன்ற ஏட்டுச்சுவடிகளில்
- ✍ இச்சுவடிகளில் கதக் ஆடுபவன் சித்தரிக்கப்பட்ட நாட்டிய சாஸ்திரப்பகுதிகளாவன,
  - ✎அர்த்தமண்டலி
  - ✎ஊர்த்துவஜானுசாரி
  - ✎ஸ்வஸ்திகசாரி
- ✍ கி.பி 16 - 18 ஆம் நூற்றாண்டு கால ராஜஸ்தானிய ஓவியங்களில் நடனமும் இசையும் தீட்டிய பகுதிகளாவன
  - ✎ஹஸ்தங்கள்
  - ✎கிருஷ்ணன் கோபிகளுடன் ஆடுதல்
  - ✎பெண்களே பெரும்பாலும் பக்க வாத்தியங்களை வாசித்தல்
- ✍ 16ம் நூற்றாண்டிலே கதக் உடை, பக்கவாத்தியம் பின்வருமாறு இருந்தது.
  - ✎உடை - உடலைப் பிடிக்கக்கூடிய சுரிதார் பிஜாமா
  - ✎பக்கவாத்தியம் - 17ம் நூற்றாண்டுக்கு முன் **மஞ்சிரா**
    17ம் நூற்றாண்டுக்கு பின் **தபேலா**
- ✍ வட இந்திய இசையான ஹிந்துஸ்தானி இசையின் அம்சமான தும்றி, பஜன், கஸல் பயன்பட்டது.
- ✍ பரதநாட்டியத்தில் **சப்தம், வரணம்** போல் கதக்கில் **துருபத்தும், கயலும்** உள்ளன.
- ✍ கதக் நடன அமைப்பானது
  - ✎உத்பிளவனமும், பிரமரிகளுடன் கூடிய துள்ளல்களும் சுற்றாட்டங்களும்.
  - ✎கண், புருவ அசைவு, கிரீவா பேதமும் காணப்படுகின்றது.
- ✍ கிருஷ்ண லீலைகள் பற்றிய கதைகள் காணப்படுகிறது, தெய்வீக நடனக்காரன், நடவர என்ற பெயர்களால் கிருஷ்ணன் அழைக்கப்பட்டான்.
- ✍ ரசலீலைகள் நாட்டிய நாடகப் பாணியில் ஆடப்பட்டன. இவற்றை கிருஷ்ண பக்தர்களான **ரசுதரிஸ்** எனும் கலைஞர் சமூகத்தினர் ஆடினார்கள்.
- ✍ கோவில்களிலே குறிப்பிட்ட நாட்களில் **ததி** (Dadhi) எனும் புனித நடனம் ஆடப்பட்டது.
- ✍ மண்டலங்கள், பிரமரிகள், கதிகள், ஹஸ்தங்கள், அபிநயம், மிருதங்கங்களின் ஒத்திசைக்கேற்ற சொற்கட்டுக்கள் என்பன காணப்படும் நூல்
  - ✎குர்தன என அழைக்கப்படும் பழைய இசைநூல்
- ✍ ராஜஸ்தானில் கதக் நடன கலை உணர்வு காணப்பட்ட இடங்கள்
  - ✎மக்களின் அழகிய ஆடைகள், அரச மாளிகைகள், கோவில்கள், கோட்டைகள்
- ✍ லக்னோகரண அல்லது கதக் நடன பாணி இந்தியாவில் புகழடையச் செய்த கலைஞர்கள்
  - ✎பிந்ததின் மஹராஜ்
  - ✎கல்கபிரசாத்
- ✍ சுத்தநிருத்தத்திற்கு அதிசயமான தாள முறைகளைக் கையாளுவதில் புகழ்பெற்றவர்
  - ✎கல்கபிரசாத்
- ✍ ஜயப்பூர் கரண அல்லது கதக் பாணியில் புகழ் பெற்றவர்
  - ✎கிர்தரிஜி
- ✍ கதக்கின் 3 பாணிகளாவன
  - ✎லக்னோ பாணி
  - ✎ஜய்ப்பூர் பாணி
  - ✎வாரணாசி பாணி
- ✍ பரதநாட்டியத்திற்கு சஞ்சாரி பாவங்கள் போன்று கதக்கிற்கு ஹஸ்தாபிநயங்கள், கத் பாவங்கள் உண்டு.

ZICTEC

- பரதநாட்டியத்தில் **தில்லானா** போன்று கதக்கில் **தரண** தூயநிருத்தமாகும்.
- காலில் கட்டிய நூறு சதங்கைகளில் 7 அல்லது 12 மட்டுமே சத்தம் செய்ய ஆடுவார்கள்.
- லயத்திலும், தாளத்திலும் வேறு இந்திய நடனம் எதுவும் கதக்கிற்கு நிகராகாது எனக் கூறியவர் ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல்.
- கதக் நடனம் கோயில், அரசசபை நடனமாக இருந்தது.
- முஸ்லிம் ஆதிக்கம் இருந்ததால் முக அபிநயம், ஹஸ்தாபிநயம் வளர்ச்சியடையவில்லை.
- கதக் நடன மறுமலர்ச்சிக்கு காரணமானவர் மேனகா என்பவர். அந்தணப் பெண். 1947 இறைவனடி சேர்ந்தார்.
- காளிதாசரின் **குமார சம்பவம் (மஹாகாவியம்) பவபூதியின் மாலதீ மாதவம் (நாடகம்)** ஆகியனவற்றை உருவாக்கியவர்கள்
  - பிருகு மஹராஜ்
  - லஜ்ஜு மஹராஜ்

- **ஆட்டமுறை**
  - கதக் நடனக்காரர் கண்களைக் கட்டிக் கொண்டு அரிசிமாவை தூவியுள்ள நிலத்தில் கால்களினால் மயில் அல்லது யானை வரைவார்கள்.
  - ஆட்டமுறை துரிதகாலத்தில் ஆரம்பித்து சௌக்க காலத்தில் முடிந்து மீண்டும் துரித காலத்தில் ஆடப்படும்.
  - பரத நாட்டியத்தைப் போலவே நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்ற பகுப்பு முறை உள்ளது.
  - பாவ, ராக, தாள முக்கியத்துவம்
  - நளின பாவம் குறைவாகவும் சுழன்று ஆடுதல் அதிகமாகவும் காணப்படும்
  - துரித சொற்கட்டுக்களும் ஒவ்வொரு மகுடத்திற்கு உபயோகிக்கும் சுற்றடவுகளில் பிரமரி முக்கிய இடம் பெறும்
  - சிருங்கார ரசம் நிறைந்து காணப்படுவதால் நடனத்தின் அசைவுகள் லாஸ்ய பாணியில் அமைந்திருக்கும்
  - சிவ தாண்டவம் ஆடப்படும். பாதங்களின் அசைவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.
  - கணேஷ்வந்தா, அமதா, பரண், கவிதா, துக்கடா, தரானா ஆகிய உருப்படிகள் உண்டு.
  - இவை ஆதி தாளம், ஜம்பை தாளம் மற்றும் தாத்ரா, தமர், செர்வா, துருபத்தீந்தாளங்களில் சொற்கட்டுகளுடன் ஆடப்படுகின்றன.
  - அபிநயப் பாடலில் தும்ரி, ராசலீலை, பஜன் மற்றும் அபிசாரிகா நடனவகை ஆடப்படும்.

- **இசைக்கருவி**
  - தபேலா

- **ஆடை, அணிகலன் ஒப்பனை**
  - பைஜாமா (குர்தா) போட்டுக் கொண்டும் தலையில் இரட்டைப் பின்னலோ அல்லது ஒற்றைப் பின்னலோ போட்டுக் கொள்வார்கள்.
  - ஆண்கள் பைஜாமா ஜிப்பா அணிந்து கொண்டு இடுப்பில் அங்கவஸ்திரம் கட்டி ஆடுவார்கள்.
  - 100 சலங்கை மணிகள் கோர்க்கப்பட்ட பட்டையான வார்க்கச்சையை காலில் கட்டிக்கொண்டு ஆடுவார்கள்.

- **கலைஞர்**
  - பிரகர்ஜிமகராஜ்
  - கல்கபிரசாத்
  - பிந்ததின் மஹராஜ்

## ஒடிசி

**தோற்றம், வளர்ச்சி**

- ஒடிசி நடனம் தோன்றிய காலம் கி.மு 2ம் நூற்றாண்டு.
- தோன்றிய இடம் ஒரிஸா மாநிலம்.
- ஒடிசி நடனம் தோன்றியதற்கு ஆதாரமான ஒரிஸா குகைகள்
  - உதயகிரி குகை
  - கண்டகிரி குகை
- ஒடிசியில் காணப்பட்ட பழைய நாடோடி நடன மரபுகள்
  - தோடிபுவா மரபு
  - படைக்கல மரபு
  - மகரி மரபு
- படைக்கல மரபு என்பது கேரளக்கலை, மணிப்புரிக்கலைகளில் இருப்பது போல் தாக்குவது, காப்பது என்பன கலைப்பண்போடு அமைக்கப்பட்டது.
- நடன வழிபாட்டு முறை காணப்படும் இடம் புவனேஷ்வரில் உள்ள மையக்கால ஆலயங்கள்.



ZICTEC

- வைணவ வழிபாட்டுக் கொள்ளைக்கு ஆதாரம் பூரி ஜகந்நாதர் ஆலயம் ஆகும்.
- 15ம் நூற்றாண்டு நடனக்கலை செயல் வடிவம் பெற்றது.
- ஒரிஸாவில் ஒடிசி நடனத்திற்கு சான்றாக இன்று உள்ள ஆதாரங்கள்
  - ஆலயச்சுவர் ஓவியங்கள்
  - நடனக்கலைஞர்கள், நடனகடகலைஞர் கூட்டம், நடன உருவங்களின் வெவ்வேறு கோலங்கள்.
  - கணேசர், தேவி, நடராஜர் போன்ற தெய்வத்திருவுருவக் கோலம்
  - சைவ சார்புள்ள புவனேஸ்வரி கோயிலில் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டவை எல்லாம் மன்மத வடிவத்திலும், தேவி வடிவத்திலும் காணப்பட்டது.
- **சோடகன் தேவர்** என்ற அரசர் 11ம் நூற்றாண்டு மத்தியில் 12ம் நூற்றாண்டு தொடக்கம், இடைக்காலத்தில் ஜெகந்நாதர் ஆலயம் எழுப்பினான்.
- **அணங்க பீமதேவ்** அரசன் ஜகந்நாதர் ஆலயத்தை புதுப்பித்தான்.
- **கொனார்க் ஆலயம்** நடன சிற்பங்கள் ஆயிரம் கொண்டு காணப்பட்டது.
- சைதன்யர்கள் பூரியில் குடியேறினார்கள். ஆந்திர, குஜராத் கலைஞர்கள் பூரிக்கு வந்தனர்.
- தேவதாசிகள், மகரிகள் வழிபாட்டுக்கு நியமிக்கப்பட்டனர்.
- **மதல் பஞ்சி** எனும் பூரி நகரின் ஏடுகள் ஆலயத்தில் ஆண், பெண் நாட்டியக்காரர்கள் பற்றிக் கூறுகிறது.
- நடனத்திற்கு ஆதாரமாக ஜைன எழுத்துப் பிரதிகளில் **கல்ப சூத்திரம், கல்காசார்யகதைகள்** காணப்பட்டது.
- மகரிகள் இரண்டு வகைப்பட்டனர்.
  - **ஆலய நர்த்தகி - பீதர் காலநியர்கள்**
  - **அரசவை நரத்தகிகள் - பாகர் காவன்யர்**
- இவற்றை தவிர பெண் வேடம் பூண்ட நாட்டியச் சிறுவர்கள் ஆலயத்திற்கு வெளியே ஆடி வந்தனர்.
- ஜகந்நாதர் ஆலயமும் கீதகோவிந்தமும் எழுந்த காலம் ஒன்றே.
- கீதகோவிந்தம் ஆலயங்களில் ஓதுவதற்கு ஏற்கப்பட்டது.
- அரசர்கள் கீதகோவிந்தம் பாட வேண்டும் என ஆணையிட்டனர்.
- கீதகோவிந்த ஆசிரியராக **ஜெயதேவர்** காணப்பட்டார்.
- பூரியில் குடியேறிய மகான் சைதன்யர் மூலம் கீதகோவிந்தம் புத்துயிர் பெற்றது.
- தம்மை ராதாவாகவும், தோழியாகவும் பாவித்து சிருங்கார பக்தி கவிதை நிலையிலிருந்து கீதகோவிந்தத்தை சம தத்துவ மட்டத்திற்கு உயர்த்தினர்.
- சைதன்ய சீடர்களில் ஒருவரான **இராமாநந்த ராய்** தேவதாசிகளுக்கும் மகரிகளுக்கும் அபிநயம் சொல்லிக் கொடுத்தார் என்று **சைதன்ய சரிதாம்ருதம்** எனும் நூல் கூறுகிறது.
- **ஜெகத்நாத வல்லப நாடகம்** இதன் ஆசிரியர் **இராமாநந்த ராய்** ஆவார்
- அரசர் கபிலேந்திர தேவர் என்பவருடைய **பரசுராம விஜயம்** 14ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.
- இசைக்கவிஞர்களாகவும் ஆடலுக்கு பாடல் இயற்றியவர்களாளவும் **கோபாலகிருஷ்ண பட்டனாயக், பன்மாலிதாஸ், உபேந்திர பஞ்சதேவர்** காணப்பட்டனர்.
- உணர்ச்சிக் கவிதை மரபாக **சௌடிஸா** காணப்பட்டது.
- ஜகந்நாதர் ஆலயத்தில் நடனம் இடம்பெற்ற உற்சவங்களாவன **டோல் ஜாத்ரா, இரத ஜாத்ரா, ஜன்மாஷ்டமி** என்பனவாகும்.
- ஈட்டிக்கோல் என்ற படைக்கல நடனங்கள் **மயூர பஞ்ஞி** எனும் நடனமாக மாறியது.
- இங்கு காணப்பட்ட கரணங்களாவன **சக்கரமண்டல, கங்காவதாரண, சகடாஸ்ய** ஆகும்.

- **ஆட்டமுறை**
  - இதில் ஆறுவகை நர்த்தனம் காணப்படும்.
  - உடலின் மூன்று வளைவுகளைக் கொண்டு **திரிபங்க நிலை** காணப்படும். அவையாவன,
    - தலை ஒருபக்கம்
    - தோளிலிருந்து இடுப்பு வரை ஒரு பக்கம்
    - இடுப்பிலிருந்து பாதம் வரை ஒரு பக்கம்
  - நாட்டியத்தின் துவக்கத்தில் பூமிப்ராணாமம் பூமியை வணங்குவதான நடனம் நடைபெறும்.
  - கணேசரைத் துதிக்கும் விக்னேஸ்வரபூஜை இடம் பெறும்.
  - சிவனது அவதாரத்தில் ஒன்றைப் போற்றி நிருத்திய அம்சம் நடைபெறும்.
  - இஷ்ட தேவதா வந்தனம் தொடங்கும்.
  - ஸ்லோகம் பாடி பாவபூர்வ அபிநயம் செய்யப்படும்.
  - ஸ்வரபல்லவி நிருத்தியத்தில் இசை தாளக்கட்டு, சொற்கட்டுக்கு ஏற்ப அங்க அசைவு.

- சிருங்கார ரசத்தைக் கொண்டு சாபிநயநிருத்தியம் செய்யப்படும்.
- ராதை, கிருஷ்ணனின் காதலைச் சித்தரிக்கும் பாடல் கடைசியாக மோட்ச நடனம் எனும் தரிஜம் அல்லது சுதங்கி என்ற நடனம் ஆடப்படும்.

## ஆடைகள்

- பட்டுச்சேலை அல்லது 9 கஜ பட்டுப்புடவை
- கவர்ச்சியான நிறங்களில் கான்ச்சுலா அல்லது சரியான அளவில் தைக்கப்பட்ட ரவிக்கை.
- செயற்கை வண்ணக் கற்கள் வைத்து தைக்கப்பட்டவை.
- நிபிபன்தா எனும் இடுப்பைச் சுற்றிச் சுருக்கங்கள் நிறைந்து தைக்கப்பட்ட மேலாடை
- ஜோபா அல்லது நீளமான கயிறு, இருபக்க முனைகளிலும் குஞ்சத்துடன் இடுப்பைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும்.

## அணிகலன்கள்

- தலை முதல் இடுப்பு வரை **வெள்ளி ஆபரணங்கள்**
- நடனக் கலைஞர்கள் **டிக்கா** எனும் வெள்ளி நெற்றிச்சுட்டயை அணிந்திருப்பபார்கள்.
- வெள்ளிச் சங்கிலிகள் காதுப்பகுதி வரை அலங்கரிக்கும்.
- கொண்டைக்குப் பின் பெரிய வெள்ளிச் சரிகை வேலைப்பாடமைந்த ஊசி அல்லது பிறைச்சந்திரன் போன்ற வெள்ளி ஆபரணமும் தலையை அலங்கரிக்கும்.
- காதணிகள் காது முழுமையும் மறைக்கும் அளவு மயில் அல்லது பல வடிவங்களில் மணி வடிவ ஜிமிக்கிகளுடன் இருக்கும்.
- இரண்டு, மூன்று நெக்லஸ்களையும் வெள்ளியிலான வங்கிகளையும் நடனக்கலைஞர்கள் அணிந்திருப்பர்.

## இசைக்கருவி

- ஹிந்துஸ்தானி இசை, கர்நாடக இசைகளின் மரபுவழி நட்டுவாங்க தாளமும், வாய்ப்பாட்டு இசை பயன்படும்.
- புல்லாங்குழல், கினி எனும் மத்தளத் தாளக் கருவி, சாரங்கி, வயலின், வீணை, மேளம், கொம்பு

## கலைஞர்

- சம்யுக்தா
- பாணிக்ரஹி
- ப்ரோதிமாபேடி
- குமாரி கம்கும்தாஸ்
- பிநாதிமிஸ்ரா

ZICTEC